No.C.04/2024 07.03.2024

# பசிப்பிணி ஒழிப்பு ஞாயிறு - 17.03.2024

**இறை இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே!**

நம்மைப் படைத்து பராமரிக்கும் இறைத்தந்தையின் அன்பும், ஏழைகளுக்கு நற்செய்தியாக வாழ்ந்த இறைமகன் இயேசுவின் அருளும், முழுமையை நோக்கி நம்மையெல்லாம் வழிநடத்துகின்ற தூய ஆவியின் வரங்களும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஏழைகளுக்கு நற்செய்தி, ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை வாழ்வு என்னும் இறையாட்சிப் பணியை ஆற்றிட தனது அக, புற ஆற்றல்களை யெல்லாம் ஒருமுகப்படுத்தவே இயேசு நோன்பு மேற்கொண்டார். இந்த இலட்சியப் பணியை நிறைவேற்றுவதற்காக வாழ்ந்து உயிர் தியாகம் செய்தவர்தாம் நம் ஆண்டவர் இயேசு. அவரது வாழ்வும், சாவும் ஓர் உன்னத நோன்பு.

## பரப்புரை மையச் சிந்தனை

2024–ஆம் ஆண்டிற்கான பசிப்பிணிக்கு எதிரான தவக்கால இயக்கத்திற்கான மையக்கருத்து “மனித நேயத்தில் சகோதரத்துவம்; அனைவருடனும் ஒன்றிணைந்து” என்பதாகும். சகோதரத்துவமே மானுட மீட்பின் நங்கூரம் எனக் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ், அமைதி மற்றும் நீதியை ஏற்படுத்துவதற்கான சகோதரத்துவத்தையும், சமுக நட்பை வளர்ப்பதற்குச் சமூக அக்கறையும், உரையாடலும் அவசியம் எனவும் வலியுறுத்துகிறார். திருத்தந்தையின் பார்வையில், மானுட நேயத்தில் மலரும் சகோதரத்துவமே நமது வாழ்வை நகர்த்தும் இயங்குச் சக்தியாக வேண்டும் என்பதே நமது ஆண்டவர் இயேசு கற்றுத்தரும் பாடம்.

## கவலை அளிக்கும் இன்றைய நிலை

நவீன மயமாக்கல், உலக மயமாக்கல் போன்றவையின் வலிமையான தாக்கம் சமூகத்தின் இரத்த நாளங்களில் கலந்திருக்கிறது. உலகுத் தழுவிய ஒற்றைப் பரிமாண நுகர்வு கலாச்சாரத் திணிப்பு முயற்சி நலமான பண்பாட்டு விழுமியங்களான மானுட நேயத்தையும், மானுட சகோதரத்துவத்தையும் சீரழிக்கின்றன. சுயநலம் என்ற விதை தூவப்பட்டு பிறர்நலம் என்ற சமூக வாழ்வின் அடித்தளம் ஏளனத்திற்கு உள்ளாகிறது. ‘வலுவுள்ளவன் வாழ்வான்’ எனப் பொய் பரப்புரைச் சொல்லப்பட்டு பலவீனமானவர்கள் வாழ தகுதியற்றவர்கள் என்ற கருத்தியல் ஊடுருவியுள்ளது. ஏழைகளும் ‘மானுடர்களே’ என்ற நிலையிலிருந்து அவர்கள் வெறும் ‘எண்ணிக்கை’ என்று தகுதியிறக்கம் செய்யப்படுகின்ற அவலம் அரங்கேறுகிறது. வறுமையின் தீவிரத்தன்மையும், கட்டுபடுத்த

இயலா நோய்களின் தொற்றுப் பரவலும் நம்மைக் கவலைக்குள்ளாக்குகிறது.

## இயேசுவின் பாதையில் பயணிப்போம்

ஏழைகள், வரிதண்டுபவர்கள், பிணியாளர் மட்டில் இயேசு எல்லையற்ற பரிவும் பாசமும் கொண்டிருந்தார். பாவிகள், ஏழைகள், பிணியாளர்கள், பிறவினத்தார் மாண்மை இழந்தவர்களாக, மனிதம் மறுக்கப்பட்டவர்களாக, தீட்டு என்று ஒதுக்கப்பட்டவர்களாக நடத்தப்பட்ட யூத சமூகத்தில் அவர்கள் சார்பாகச் செயல்பட்டவர் இயேசு. வலிமையற்றோரை ஆற்றல்படுத்துவதும் நலிந்தோரின் நலம் பேணுவதும் ஒதுக்கப்பட்டவர்களோடு உடனிருப்பதும் இறையாட்சிப் பணிகள் எனக் கண்டார்.

மக்கள் கூட்டத்தைக் கண்டு மனமிரங்கி பிணியாளர்களை நலமாக்கினார் (மத் 14:14). பசியோடிருந்த மக்களைக் கண்டு பரிவுகொண்டு உணவளிக்கும்படி சீடர்களைப் பணித்தார் (மத் 15:32–33). தொழு நோயாளியைத் தொட்டுக் குணப்படுத்தினார் (லூக் 5:13). பிச்சைக்காரரின் கண்களைத் திறந்து பார்வை அளித்தார் (மத் 20:29–34). சமாரியர் ஊரில் தங்கினார் (யோவா 4:40). "உன்மீது நீ அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக" என்று மொழிந்த இயேசு, நம் அயலான் யார்? அவரை எப்படி அன்பு செய்வது என்று விளக்கினார் (லூக் 10:25–37). இயேசுவின் இதயம் கனிந்த அன்பு ஏழைகள், பிணியாளர்களின் வறுமையையும் நோய்களையும் போக்கி மனித நேயத்தில் சகோதரத்துவம் வளர நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்காய் முன் செல்கிறது.

## நமது கடமையும் பொறுப்பும்

'திருஅவையின் சமூக அக்கறை' என்ற சுற்றுமடலில் திருத்தந்தை புனித 2–ம் ஜாண்பால், "மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும். மனித நேயம் வளர்க்கப்படவேண்டும். ஏனெனில் மனிதர் கடவுளுடைய சாயலாகவும் பிள்ளைகளாகவும் படைக்கப்பட்டவர்கள்" என்று கூறுகிறார். எனவே, தேவையில் உழல்வோருக்கு உதவுவதும் அவர்களின் துயரத்தில் அக்கறையோடுப் பங்கு பெறுவதும் மானிட நேயத்தின் வெளிப்பாடு. இந்த மானிட நேயப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல் என்பது இயேசுவின் இறையாட்சிப் பணியின் அங்கமாகும்.

"இறையன்பும், பிறர் அன்பும் இரு வேறு அன்புகள் அல்ல. மாறாக, ஒரே அருளுறவின் இரு பக்கங்கள். அதுபோல் இறைப்பணியும், சமூகப்பணியும் வேறான இரண்டு அல்ல, மாறாக, ஒரே அருள்வாழ்வின் பிரிக்க முடியாத இரு ஈடுபாடுகள்" எனக் 'கோட்டாறு மறைமாவட்டத்தில்

கிறிஸ்தவ வாழ்வும் பணியும்' என்கிற ஏட்டின் அடியொற்றி பங்களவில் இக்காலத்திற்கேற்ற பிறரன்புப் பணிகளை முன்னெடுப்பது மிகவும் அவசியமாகிறது. நம் பங்குகளில் ஏழையர், வறியவர் சார்பாக பல நலத்திட்டங்களும் உதவிகளும் முன்னெடுக்கப்படுவதை நான் நன்கறிவேன். ஏழையர் நலப்பணியில் ஆர்வத்தோடுச் செயல்படுகின்ற அனைவரையும் உளமாரப் பாராட்டுகின்றேன். இருப்பினும் மீண்டும் சிலவற்றை நினைவுறுத்த விரும்புகிறேன்.

- ❍ பங்குத்தளங்ளில் ஏழைகள், பிணியாளர்கள் மட்டில் பரிவும் கரிசனையும் கொண்டிருப்பது சிறப்பானது. இவை தொடர் செயல்பாடுகளாக அமைவது நலம். அவர்களுக்கென நலத்திட்டங்களை உருவாக்குவது இக்காலத்தின் தேவை என உணர்வோம். நம் பங்கின் நிகர வருவாயில் ஏழைகளுக்கென 10% ஒதுக்கிச் செயல்படுத்துவோம்.

- ❍ பிறரன்புப் பணியாற்றும் மறைமாவட்ட சமூகப் பணி மையத்தோடு இணைந்து பணியாற்றும்போது தேவையில் உழல்வோரை அடையாளம் கண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றிட ஏதுவாக அமையும். எனவே, அதனோடு நம் பங்கு நேரடித் தொடர்பில் இருப்போம். இணைந்து செயல்படுவோம்.

- ❍ பங்குத் தளங்களில் எழைகள், பிணியாளர்கள் மீது கரிசனையும் அக்கறையும் கொண்ட சமூகப்பணி குழு உருவாக்குதல் மூலம் சமத்துவம், சகோதரத்துவம் வளரவும் மனித நேயம் மலரவும் வழிவகை ஏற்படும்.

- ❍ உலகளவில் ஏழ்மையை எதிர்க்க உறுதிகொள்வோம். அன்பு, தோழமை உணர்வு, சகோதரத்துவக் கூட்டுறவை மேம்படுத்துவோம். அது நம் பங்கில் தொடங்கட்டும்.

- ❍ மாற்றுத்திறனாளிகள், புலம் பெயர்ந்தோர், மூன்றாம் பாலினத்தார், நீடித்த நோயுற்றோர், சிறையுற்றோர், மூத்தக் குடிமக்கள், குழந்தைகள், தொழிலாளர்களை முதன்மைப்படுத்தி பணிபுரிவோம். அவர்கள் தனிக்கவனத்துக்குரியவர்கள் என உணர்ந்து சிறப்புத் திட்டங்களைப் பங்களவில் உருவாக்குவோம்.

- ❍ இயேசுவின் முன் மாதிரியை பின்பற்றி ஏழ்மை, வறுமை இல்லா உலகை கட்டமைக்கின்ற ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தைக் கொண்ட ஒருங்கிணைந்த முழுமையை நோக்கி நமது பங்குத்தளங்களின் செயல்பாடு அமையும் வண்ணம் பங்கில் பசியுற்றோர் எவரும் இல்லை எனும் நிலையை உருவாக்குவோம்; உறுதிப்படுத்துவோம்.

## நமது மறைமாவட்டத்தில்

ஒவ்வோர் ஆண்டும் சிறப்பிப்பதுபோல உலகத் திருஅவையோடு இணைந்து நமது கோட்டாறு மறைமாவட்டத்தில் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறைப் (17.03.2024) பசிபிணி ஒழிப்பு ஞாயிறாக எல்லா பங்கு, கிளைபங்குத் தளங்களில் கொண்டாட அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். ‘‘பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியவரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றவரைக் காணும் போது அவர்களுக்கு உடுக்க கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நாம் விரும்பும் நோன்பு’’ (எசா 58:7) என்ற இறைவார்த்தைக்குச் செயல் வடிவம் கொடுப்போம். உண்மையான நோன்பு என்பது வறியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களை மனித மாண்போடு நடத்துவது என்ற நம் திருத்தந்தையின் கரிசனைமிக்கக் கூற்றினை ஏற்று, பசிப்பிணியால் வாடுவோரின் துயர்போக்கும் வகையில் ஆக்கபூர்வமாக உதவிட உங்கள் அனைவரையும் அன்பாய் கேட்டு கொள்கின்றேன்.

17.03.2024 – ஞாயிறு அன்று நம் ஆலயத்தில் சிறப்புக் காணிக்கைக்கு ஏற்பாடு செய்தும் எல்லா குடும்பங்கள், அன்பியங்கள், திருத்தூதுக் கழகங்கள், இயக்கங்கள், ஏனைய பிற பங்கேற்பு அமைப்புகளைச் சார்ந்த ஒவ்வொருவரிடமிருந்து காகித உறைகள் வழியாகத் தாராள நன்கொடைகளைப் பெற்று கோட்டாறு மறைமாவட்ட சமூகப்பணி மையமாகிய கோட்டாறு சமூக சேவை சங்கத்தில் ஒப்படைத்து ரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கின்றேன்.

‘‘மிக சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்’’ (மத் 25:40) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்போம். ஆகவே இந்தத் தவக்காலத்தை வெறுமனே சடங்கு என்று கடந்து செல்லாமல் வறியவர்களின் தேவைகளை நமது சிறு சிறு உதவிகள் வழியாக நிறைவு செய்வோம். அப்போது எசாயா இறைவாக்கினர் சொல்வது போல ‘‘உன் ஒளி விடியல் போல் எழும். விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும். உன் நேர்மை உனக்கு முன் செல்லும். ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின் சென்று காக்கும்’’. நாம் அனைவரும் ஒன்றிணைந்து இவ்வுலகில் மனித நேயத்தில் சகோதரத்துவம் தழைக்க முன்னெடுக்கும் நம் அனைத்து முயற்சிகளுக்கும் இறைவன் நிறைவாக ஆசி வழங்குவாராக !

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**